# ஆம்பூர் நகராட்சி

2019-ம் வருடம் செப்டம்பர் மாதம் 30-ம் தேதி திங்கட்கிழமை மாலை 4.30மணிக்கு நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகளின் உண்மைநகல்:

முன்னிலை: திரு.த.சௌந்தரராஜன்.பி.ஏ.,
தனி அலுவலர், ஆம்பூர் நகராட்சி.

1. இந் நகராட்சிக்கு பணிப்புரிந்து ஓய்வுபெற்ற கீழ்குறிப்பிட்டுள்ள பணியாளர்கள் செலுத்திய சிறப்பு சேமநலநிதி சந்தாதொகை வட்டி மற்றும் நிர்வாக பங்குத்தொகை கீழ்குறிப்பிட்டவாறு வழங்க அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண் | பணியாளர்கள் பெயர் திருவாளர்கள் | பதவி | ஓய்வு பெற்ற நாள் | சந்தா தொகை ரூ. | வட்டி ரூ. | பங்கு தொகை ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஜி.என்.ராமமூர்த்தி | துப்புரவு பணியாளர் | 30.6.19 | 2960 | 31397 | 10000 | 44357 |
| 2 | எஸ்.லட்சுமி க/பெ.செல்வராஜ் | துப்புரவு பணியாளர் | 30.6.19 | 2960 | 31397 | 10000 | 44357 |
| 3 | சின்னதாய் க/பெ.சின்னேட் | துப்புரவு பணியாளர் | 30.6.19 | 10360 | 13817 | 10000 | 34177 |
| 4 | ஜே.செல்வராஜ் த/பெ.ஜேக்கப் | துப்புரவு பணியாளா | 30.6.19 | 2960 | 31397 | 10000 | 44357 |
| 5 | எ.நாசர்பாஷா | துப்புரவு பணியாளர் | 30.6.19 | 10360 | 13817 | 10000 | 34177 |
| 6 | ஆர்.ராஜசேகரன் | துப்புரவு பணியாளர் | 31.7.19 | 10360 | 13887 | 10000 | 34247 |

அலுவலகக்குறிப்பு: மேற்கண்டவாறு சிறப்பு சேமநலநிதி சந்தாதொகை, வட்டி தொகை மற்றும் நிர்வாக பங்குத்தொகை வழங்க அனுமதிக்கலாம்.
ந.க.எண்.481/2015/பி3
தீர்மான எண்.39:-அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

2. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செம்மையாக செயல்படுத்த வேண்டி தேவையான துப்புரவு பணியாளர்கள் பற்றாக்குறையாயக உள்ளதின் காரணமாக இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தனியார் ஒப்பந்த துப்புரவுபணியாளர்களை கொண்டு துப்புரவுப்பணிகள் மேற்கொள்ள வேண்டி மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர் அவர்கள் நிர்ணயித்த தினக்கூலி அடிப்படையில் ஒப்பந்த முறைப்படி துப்புரவு பணியாளர்களை அமர்த்திக் கொள்ள நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.10623/பி3/2017, நாள் 19.6.2017ல் அனுமதி அளித்ததின் பேரில் திட்டத்தினை மேலாண்மை பணிகளை மேற்க்கொள்ள தேவையான துப்புரவு பணியாளர்களை ஓராண்டிற்கு 01.10.2019 முதல் 30.9.2020 வரை சப்ளை செய்ய 29.6.2019ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒபபந்ததாரர் பெயர்(ம) விலாசம் | நபர் 1-க்கு ஒரு நாள் தினக்கூலி ரூ. |
|---|---|---|
| 1 | **M/S. Kay Yes Construction. Vellore.** | **Rs.418/- Per head (Rupees Four hundred and eighteen only)** |
| 2 | **LD Man Power Solutions, Vellore.** | **Rs.415/- Per head (Rupees Four hundred and fifteen only)** |

அலுவலகக்குறிப்பு: அ. திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பொது சுகாதாரத்தின் அவசியம் கருதி துப்புரவுப்பணிகள் செய்ய துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் 1.10.19 முதல் 30.9.2020 வரையிலான ஓராண்டு காலத்திற்கு நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் 10623/பி3/2017, நாள் 19.6.2017-ன் நிபந்தனைகளின்படி பணிக்கு அமர்த்திக்கொள்ள ஆகும் செலவுத் தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

ஆ. மேற்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள **LD Man Power Solutions,Vellore** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொள்ளவும் மாவட்ட ஆட்சியர், வேலூர் (ம) நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்கள் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டும், நிபந்தனைகளை ஒப்பந்ததாரர் மீறி செயல்படுவதை ஆணையாளர் அவர்களால் கண்டறியப்பட்டால் ஒப்பந்தத்தை ரத்து செய்யப்படும் என்ற நிபந்தனையுடன் பணியாணை வழங்கலாம்.

இ. முன்அனுமதிப்பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கும் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.789/19/எச்1

தீர்மான எண்.40:-அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

3. நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர், சென்னனை அவர்களின் செயல்முறைக் கடிதம் ந.க.எண். 10623/பி3/2017, நாள் 19.6.2017ல் அனுமதித்துள்ளவாறு, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் துப்புரவுப்பணிகள் செய்ய துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் வழங்க ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கையை மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான தினமணி (ம) இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆகிய நாளிதழ்களில் 27.8.2019ம் தேதியன்று **Elegant Publicity** சென்னை என்ற நிறுவனம் மூலம் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்காணும் விளம்பரம் செய்தமைக்குண்டான பில் தொகை ரூ.1,24,790/- (ரூபாய் ஒரு லட்சத்து இருபத்தி நான்காயிரத்து ஏழுநூற்று தொண்ணூறு மட்டும்) மேற்படி நிறுவனத்திற்கு வழங்கவும் அதற்கான செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- அனுமதிக்கலாம்.

ந.க.எண்.789/19/எச்1

தீர்மான எண்.41:-அனுமதிக்கப்பட்டது.

4. இந் நகராட்சிக்கு தேவையான சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி மற்றும் வரியில்லா இனங்களின் வரி செலுத்தும் கணினி ரசீதுகள், பிறப்பு சான்று படிவங்கள் மற்றும் பதிவேடுகள் இருப்பில் இல்லாத காரணத்தினால் மேற்படி பொருட்களை வடாற்காடு மாவட்ட சிறுதொழில் கூட்டுறவு அச்சகம் லிமிடெட், வேலூர் (**NAPCO LIMITED, VELLORE**) அவர்களிடமிருந்து பணி உத்திரவு வழங்கி பெற்றுக் கொள்ளவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.7.00லட்சம் (ரூபாய் ஏழு லட்சம் மட்டும்) அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம்.

ந.க.எண்.433/18/பி3

தீர்மான எண்.42:-அனுமதிக்கப்பட்டது.

5. இந்நகராட்சியில் கீழ் குறிப்பிட்டுள்ள பணியினை மேற்கொள்ள தீர்மான எண் 8 நாள்: 30.05.2019-ல் அங்கிகாரம் பெற்று 04.09.2019-ஆம் தேதியன்று ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளின் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணயின் விவரம் | ஒப்பந்தப் புள்ளி தொகை (ருபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருமதி | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்கு சொந்தமான ஆழ்துளை கிணறுகளில் உள்ள மினிபவர் பம்ப் நீரேற்று நிலையங்களில் உள்ள மற்றும் தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிகளில் உள்ள மின்மோட்டார் திறந்தவெளி கிணற்றில் உள்ள மின்மோட்டார்கள், ஆழ்துளை கிணறுகளில் உள்ள பவர் பம்ப் மோட்டார்கள், பொது கழிப்பிடங்களில் உள்ள கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள மின்மோட்டார்கள், நகராட்சி பள்ளிகளில் உள்ள மின்மோட்டார்கள் என மொத்தம் உள்ள 507 மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்தல். | 5.00 | 1.எஸ்.அருணாசலம்<br><br>2. ஏ.வி. நாகராஜன் | 0.05% மதிப்பீட்டை விட குறைவு<br><br>0.90% மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலகக்குறிப்பு:

1. மேற்படி பணியினை குடிநீர் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கலாம்.
2. குடிநீர் விநியோகப்பணியின் அவசர அவசியத்தை கருதி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட பணிக்கு குறைவான ஒப்பந்தபுள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர், திரு. எஸ். அருணாசலம், என்பவருக்கு பணி உத்திரவு வழங்கியமைக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்: 486/2019/இ2

தீர்மான எண்.43:-அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

6. இந் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கீழ்குறிப்பிட்டுள்ள விவரப்படி பணிகள் மேற்கொள்ளவும், அதற்காகும் மதிப்பீடு தொகைகளுக்கும் அங்கீகாரம் கோரப்படுகிறது.

| வ.எண். | பணியின் விவரம் | மதிபிபீடு தொகை (ரு.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு.எண்.28-ல் கம்பிக்கொல்லை பகுதியில் டோபி காலனி பிரதான சாலையில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல். | 6.50 |
| 2 | வார்டு.எண்.28-ல் கம்பிக்கொல்லை பகுதியில் ஆனைமடுகு தடுப்பணைக்கு செல்லும் பிரதான சாலையில் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் | 3.50 |

அலுவலக குறிப்பு:- அங்கீகாரம் வழங்கலாம். மேற்குறிப்பிட்டுள்ள பணிகளை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்

ந.க.எண்.379/2019/இ1

தீர்மான எண்.44:-அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

7. இந் நகராட்சிக்கு சொந்தமான காந்தி சாலை ஆரம்ப பள்ளியின் இரண்டு கட்டிடங்களில் பழுதடைந்துள்ள Weathering coarse மற்றும் Pressed Tiles ஆகியவற்றை அப்புறப்படுத்திவிட்டு புதியதாக அமைக்கவும், மராமத்து பணிகள் மேற்கொண்டு புதியதாக வர்ணம் பூசிடவும் அதற்காகும் மதிப்பீடு தெகை ரூ.5.00இலட்சத்திற்கும் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு:- மேற்குறிப்பிட்டுள்ள பணியினை கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ளவும்,அதற்காகும் மதிப்பீடு தொகைக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.
ந.க.எண்.924/2019/இ1
தீர்மான எண்.45:-அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

8. இந் நகராட்சிக்கு சொந்தமான கோவிந்தாபுரம் நகராட்சி நடுநிலைப் பள்ளியின் கட்டிடங்களின் மேற்கூரையில் பதியப்பட்டுள்ள Weathering coarse மற்றும் Pressed Tiles ஆகியவை பழுதடைந்துள்ளதால் மழைநீர் கசிந்து மின்கசிவு ஏற்படுவதால் அவற்றை அப்புறப்படுத்திவிட்டு புதியதாக அமைக்கவும், புதியதாக மின்ஒயரிங் செய்யவும், பழுதடைந்துள்ள கழிப்பறை மேற்கூரைகளை அப்புறப்படுத்திவிட்டு புதியதாக மேற்கூரை அமைத்திடவும் அதற்காகும் மதிப்பீடு தெகை ரூ.6.80 இலட்சத்திற்கும் (ரூபாய் ஆறு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு:- மேற்குறிப்பிட்டுள்ள பணியினை கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ளவும்,அதற்காகும் மதிப்பீடு தொகைக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.
ந.க.எண்.542/2019/இ1
தீர்மான எண்.46:-அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

9. தமிழக அரசின் சீரிய திட்டமான மழைநீர் சேகரிப்பு திட்டத்தினை செம்மையாக செயல்படுத்தும்பொருட்டு கீழ்குறிப்பிட்டுள்ள விவரப்படி பணிகள் மேற்கொள்ளவும், அதற்காகும் மதிப்பீடு தொகைகளுக்கும் அங்கீகாரம் கோரப்படுகிறது.

| வ.எண். | பணியின் விவரம் | மதிபிபீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | இந் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்துதல் | 5.75 |
| 2 | இந் நகராட்சிக்கு சொந்தமான 23 எண்ணிக்கை அங்கன்வாடி மைய கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்துதல் | 2.65 |
| 3 | இந் நகராட்சிக்கு சொந்தமான 9 எண்ணிக்கை ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளி கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்துதல் | 4.85 |

அலுவலக குறிப்பு:- அ.அங்கீகாரம் வழங்கலாம்.
ஆ.வ.எண்.1 மற்றும் 2-ல் குறிப்பிட்டுள்ள பணிகளை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கலாம்.
இ. வ.எண்.3-ல் குறிப்பிட்டுள்ள பணியினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கலாம்.
ந.க.எண்.379/2019/இ1
தீர்மான எண்.47:-அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

10. துணை சேமநலநிதி ஆணையாளர், தொழிலாளர், சேமநலநிதி நிறுவனம், வேலூார் அவர்களின் கடித எண்.TN/VL/92205/ENF/DIV.IV/2013, நாள் 02.08.2013-ல் தெரிவித்துள்ளவாறு, இந்நகராட்சியில் பதிவு பெற்றுள்ள ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப் பணிகள் மேற்க்கொள்ளப்படும்போது கட்டுமான பணிகளுக்காக நியமனம் செய்யப்படும் தொழிலாளர்களின் விவரத்தையும் மற்றும் அத்தொழிலாளர்களுக்கு " தொழிலாளர் வருங்கால சேமநலநிதி மற்றும் பல்வகை ஏற்பாடுகள் விதி 1952"ன்படி வருங்கால சேமநலநிதி செலுத்தப்பட்ட விவரம் வழங்குமாறு இவ்வலுவலக அறிவிப்பு ந.க.எண்.2260/2013/இ1, நாள் 25.7.2014-ல் இந்நகராட்சியில் பதிவு பெற்றுள்ள ஒப்பந்ததாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. ஆம்பூர் நகர ஒப்பந்ததாரர்களின் நல சங்கம் சார்பில், மேற்குறிப்பிட்ட இவ்வலுவலக அறிவிப்பு கடிதத்திற்கு எதிராக மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத்தில் முதல் பிரதி வாதியாக தொழிலாளர் சேமநலநிதி நிறுவனத்தையும், 2வது பிரதிநிதியாக ஆம்பூர் நகராட்சியையும் சேர்த்து வழக்கு தொடர்ந்து W.P.No.28594 of 2014-ல் இடைக்கால தடை உத்திரவு பெற்றுள்ளனர். இது குறித்து கூடுதல் அரசு வழக்கறிஞர் அவர்களிடம் சட்ட கருத்துரு கோரியதில், மேற்படி வழக்கின் இறுதி முடிவு தெரிந்த பின்னர் வருங்கால சேமநலநிதி செலுத்துவது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளலாம் என சட்ட கருத்துரு வழங்கப்பட்டது.

இந் நகராட்சியில் 01.01.2011 முதல் 31.03.2014 வரையில் நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்தாரர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கான தொழிலாளர் வருங்கால சேமநலநிதி தொகை ரூ.1,35,06,420/-ஐ செலுத்தப்பட வேண்டும் என துணை சேமநலநிதி ஆணையாளர், தொழிலாளர், சேமநலநிதி நிறுவனம், வேலூார் அவர்களின் கடித எண்.TN/VL/92205/ENF/DIV.IV/2019-20/2683, நாள் 28.06.2019-ல் தெரிவிக்கப்பட்டது. மேற்குறிப்பிட்டுள்ள 01.01.2011 முதல் 31.03.2014 வரையிலான காலத்தில் பணிகளை செய்த ஒப்பந்ததாரர்களில் பல ஒப்பந்ததாரர்கள் தற்போது நகராட்சியில் பதிவில் இல்லை. சில ஒப்பந்நதாரர்கள் இறந்து போய்விட்டனர். அவ்வாறான ஒப்பந்ததாரர்களின் கணக்கில் இந்நகராட்சியில் நிலுவைத்தொகையும் ஏதுமில்லை. மேலும் ஒப்பந்ததாரர்களின் சார்பாக தொடரப்பட்ட வழக்கு W.P.No.28594 of 2014-ல் இடைக்கால தடை உத்திரவு பெற்று வழக்கு நிலுவையில் உள்ளதால் மேற்கண்ட நடவடிக்கையினை நிறுத்தி வைக்குமாறு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.2260/2013/இ1, நாள்.21.09.2019 மூலம் உதவி சேமநலநிதி ஆணையாளர், தொழிலாளர் சேமநலநிதிஅலுவலகம்,வேலூர்.9 அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் மேலாளர், பாரத மாநில வங்கி,ஆம்பூர் கிளை அவர்களின் 26.09.201-ம் தேதிய கடிதத்தில், 01.01.2011 முதல் 31.03.2014 வரை காலத்திற்கான தொழிலாளர் வருங்கால சேமநலநிதித்தொகை ரூ.1,35,06,420/-ஐ நகராட்சி கணக்கிலிருந்து வங்கி கேட்பு வரைவோலையாக தொழிலாளர் சேமநலநிதி அலுவலக அமலாக்க அலுவலரால் பெற்று செல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. மேற்கண்ட நடவடிக்கையை எதிர்த்து நகராட்சியின் சார்பாக சென்னை தொழிலாளர் சேமநலநிதி தீர்ப்பாயத்தில் சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் திரு.பி.பாநீனிவாஸ் அவர்கள் மூலம் அபிடவிட் தாக்கல் செய்யப்பட்டு மேல்முறையீடு வழக்கும், மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனுவும் தாக்கல் செய்யப்படட்டது. (W.P.No.29796 of 2019) மேற்படி வழக்கிற்கு வழக்கறிஞர் கட்டணத்தொகை ரூ.25,000/-ஐ (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) மேற்குறிப்பிட்ட வழக்கறிஞருக்கு வழங்க அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- அனுமதி வழங்கலாம். மேலும் அவசர அவசியம் கருதி வழக்கறிஞர் கட்டணத்தொகை வழங்கிட நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.2260/இ1/2013

தீர்மான எண்.48:-அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

11. இந் நகராட்சியில் 2018-19 ஆம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நகராட்சி உரகிடங்கு பகுதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் மைய கட்டிடத்திற்கு மும்முனை மின் இணைப்பு வழங்க புதிய மின் பாதை விரிவாக்க பணிக்கான மின் கட்டணத் தொகை ரூ.45,520/-ஐ செலுத்துமாறு உதவி மின் பொறியாளர்(இ&ப), துணை மின் நிலையம்,தமிழ்நாடு மின்சார வாரியம்,ஆம்பூர் அவர்களின் க.எண்.உபொ/துமிநி/ஆம்பூர்/கோ.பொ/அஎண்.170/19-20 நாள்.18.09.2019-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.மேற்குறிப்பிட்டுள்ள தொகையை மின்வாரியத்திற்கு செலுத்த அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-அ.அங்கீகாரம் வழங்கலாம்.

ஆ.மேற்குறிப்பிட்டுள்ள தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலுத்த அங்கீகாரம் வழங்கலாம்

இ.அவசர அவசியம' கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று தொகையினை மின்வாரியத்திற்கு செலுத்த நடவடிக்கை எடுத்தமைக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.331/2018/இ1

தீர்மான எண்.49:-அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

12. இந்நகராட்சியின் அலுவலக ஈப்பு வாகன எண் TN83 Y9506 –ஐ ஆயில் சர்வீஸ் மற்றும் இதர பழுதுகளை மகேந்திரா நிறுவன அங்கிகாரம் பெற்ற டீலர் ஜெயின் கார்ஸ் நிறுவனத்தின் மூலம் சரி செய்யப்பட்ட வகையில் எற்பட்ட செலவினத் தொகை ரூ 32,494/-க்கு அங்கிகாரம் கோரப்படுகின்றது.

அலுவலக குறிப்பு:

அலுவலக பணியின் அவசர அவசியத்தை கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று மேற்கண்ட பணியினை மேற்கொணடமைக்கும், பணிக்கான செலவினத் தொகை வழங்கிமைக்கும் மன்றம் அங்கிகாரம் வழங்கலாம்.

(ந.க. எண்: 948/2018/இ2)

தீர்மான எண்.50:-அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

13. இந் நகராட்சி எல்லைக்குட்பட்ட கம்பிக்கொல்லை பகுதியில் உள்ள ஆனைமடுகு தடுப்பணையில் விநாயகர் சதுர்த்திக்காக வைக்கப்படும் விநாயகர் சிலைகளை கரைக்க பொதுமக்களின் பாதுகாப்பு கருதி தேவையான கீழ்குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகள் செய்யவும் அதற்காகும் உத்தேச செலவினத்தொகை ரூ.45,000/-க்கும் அங்கீகாரம் கோரப்படுகிறது.

| வ.எண் | விவரம் |
|---|---|
| 1 | மரக்கட்டைகளை கொண்டு தடுப்பு வேலிகள் அமைத்தல் |
| 2 | மிக்வசதிகள் செய்தல் |
| 3 | விநாயகர் சிலைகளை கரைக்க தேவையான பளுதூக்கி (Lifting Cranes) வாடகை அடிப்படையில் தருதல். |

மேற்குறிப்பிட்டுள்ள விவரப்படி ஏற்பாடுகளை செய்து தருதல் பணிக்கு உள்ளூரில் விலைப்புள்ளிகள் கோரியதில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விவரம் கீழ் வருமாறு பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | எஸ்.அருணாசலம்,<br>78/191,எஸ்.கே.ரோடு,<br>கிருஷ்ணாபுரம்,ஆம்பூர் | M.R.S. சப்ளையர்ஸ்<br>4வதுதெரு,<br>ஆசனாம்பட்டுரோடு,<br>பெத்லகேம்,ஆம்பூர் | ராஜா சவுண்ட் சர்வீஸ்,<br>4, 4-வது வடக்கு தெரு,<br>ரெட்டித்தோப்பு,ர் |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | மரக்கட்டைகளை கொண்டு தடுப்பு வேலிகள் அமைத்தல் | 2நாட்களுக்கான வாடகை தொகை.ரு.26400/- | 2நாட்களுக்கான வாடகை தொகை. ரு.31,200/- | 2நாட்களுக்கான வாடகைதொகை. ரு.27,500/- |
| 2 | 4X40Wகுழல்விளக்கு பிட்டிங்குகள்.2x17x120/- | 2நாட்களுக்கான வாடகை தொகை.ரு.4080/- | 2நாட்களுக்கான வாடகை தொகை. ரு.4590/- | 2நாட்களுக்கான வாடகைதொகை. ரு.4420/- |
| 3 | 400W சோடியம் ஆவி விளக்கு 2x12x400/- | 2நாட்களுக்கான வாடகை தொகை.ரு.9600/- | 2நாட்களுக்கான வாடகை தொகை. ரு.10800/- | 2நாட்களுக்கான வாடகைதொகை. ரு.10080/- |
| 4 | விநாயகர் சிலைகளை கரைக்க தேவையான பளுதூக்கி (Lifting Cranes) வாடகை அடிப்படையில் தருதல். | ஒரு மணி நேரத்திற்கு ரு.950/- | ஒரு மணி நேரத்திற்கு ரு.1050/- | ஒருமணி நேரத்திற்கு ரு.980/- |

அலுவலக குறிப்பு:-அ.அங்கீகாரம் வழங்கலாம்.

ஆ.மேற்குறிப்பிட்டுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் திரு.எஸ்.அருணாசலம், 78/191,எஸ்.கே.ரோடு, கிருஷ்ணாபுரம், ஆம்பூர் என்பவர் கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளியை அங்கீகிரிக்கலாம்.

இ. அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளிதாரர் மூலம் மேற்படி பணியினை மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கியமைக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.835/இ1/2019

தீர்மான எண்.51:-அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

14. இந் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சேகரம் செய்யப்படும் குப்பைகளில் உள்ள அபாயகரமான கழிவுகளான டயாப்பர்கள் மற்றும் நாப்கின்கள் ஆகியவற்றை எரிக்க தேவைப்படும் Incinerator -இ வாங்கி நகராட்சி உரகிடங்கில் பொருத்திடவும், அதற்காகும் மதிப்பீட்டுத்தொகை ரு.3.75 இலட்சத்திற்கும் (ருபாய் மூன்று இலட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- அங்கீகாரம் வழங்கலாம்.மேற்படி பணியனை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.இ1/879/2019

தீர்மான எண்.52:-அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

15. இந் நகராட்சிக்கு சொந்தமான தார்வழி பகுதியில் உள்ள நகராட்சி உரகிடங்கில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள நுண்ணுயிர் உர செயலாக்க மையத்தில்(MCC) உள்ள கழிவறைக்கு நச்சுநீர் தொட்டி அமைக்கவும், கழிவறை தரை மற்றும் சுவர் பகுதிக்கு செராமிக் டைல்ஸ் பதித்திடவும், வர்ணம் மற்றும் பெயின்ட் அடித்து பெயர்பலகை எழுதிடவும், மேற்படி மையத்தின் முன்பகுதியில் உள்ள மண் பகுதியினை சிமெண்ட்தளமாக அமைத்திடவும் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத்தொகை ரு.4.50 இலட்சத்திற்கு (ருபாய்.நான்கு இலட்சத்து இம்பதாயிரம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது

அலுவலக குறிப்பு:- அங்கீகாரம் வழங்கலாம்.மேற்படி பணியனை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.இ1/835/2019

தீர்மான எண்.53:-அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

16. இந் நகராட்சிக்கு சொந்தமான தார்வழி பகுதியில் உள்ள நகராட்சி உரகிடங்கின் மேற்கு பகுதியில் உள்ள உரம் தயாரிக்கும் மேடைக்கு செல்லும் பாதையானது மண் பாதையாக உள்ளதால் மழைகாலங்களில் சேறும் சகதியும் ஏற்படுவதால் மக்கும் குப்பை தயாரிக்க எடுத்து செல்லும் நகராட்சி வாகனஙகளுக்கு பெரும் இடையூறாக உள்ளது. எனவே, மேற்படி உரம் தயாரிக்கும் மேடைக்கு செல்லும் பாதைக்கு சிமெண்ட்தளம் அமைக்கவும், அதற்காகும் மதிப்பீடு தொகை ◦ ரு.7.75 இலட்சத்திற்கும் (ரூபாய்.ஏழு இலட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- அங்கீகாரம் வழங்கலாம்.மேற்படி பணியனை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.இ1/1001/2019

தீர்மான எண்.54:-அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

17. இந்நகராட்சியால் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய வருமான வரி கணக்குகளை தணிக்கையாளர் மூலமாக அரசு இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும் பணியினை **S.R. Accounting services, Vellore** நிறுவனத்தின் மூலம் மேற்கொண்ட வகையில் வரப்பெற்றுள்ள பட்டியல் தொகை ரு 32,750/-ஐ வி.ஆர். வாசுதேவன், **S.R. Accounting services, Vellore** அவர்களுக்கு வழங்க அங்கிகாரம் கோரப்படுகின்றது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. அங்கீகாரம் வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு ஆகும் செலவின தொகைக்கு அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி பணியினை வருவாய் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்:982/2019/பி2

தீர்மான எண்.55:-அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

18. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 9 எண்ணிக்கை மேல்நிலை மற்றும் கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு தலைமை நீரேற்றும் நிலையங்கள் மற்றும் வேலூர் கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக இந்நகராட்சி பகுதிக்கு தினசரி குடிநீர் விநியோகம் மேற்க்கொள்ள நீர்த்தேக்க தொட்டிகளில் நீரேற்றுவதை விநியோகம் செய்ய தேவைப்படும் குடிநீர் குழாய் திருகுநர் (வால்வு ஆப்ரேட்டர்) பணியினை மேற்கொள்ள ரு 9.00 இலட்சத்திற்க்கு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு தீர்மான எண் 212 நாள்: 03.03.2019-ல் அங்கீகாரம் பெற்று 31.08.2019-ம் தேதி வரை பணிகள் மேற்கெள்ளப்பட்டதில் ரு 163470.00 மட்டுமே மீதம் உள்ளது. எனவே, மேற்படி பணியினை மேலும், 6மாத காலத்திற்க்கு 16 எண்ணிக்கை பணியாளர்களை கொண்டு தொடர்ந்து பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினத் தொகை ரு9.00 லட்சத்திற்க்கு அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. அங்கீகாரம் வழங்கலாம். மேற்கண்ட பணிக்காகும் செலவினத்தை குடிநீர் நிதியின் கீழ் மேற்க்கொள்ளவும் அங்கீகரிக்கலாம்.
2. குடிநீர் வினியோக பணியின் அவசியம் கருதி மேற்படி பணியினை எற்க்கனவே செய்து வரும் ஒப்பந்ததாரரை கொண்டு பணியினை மேற்க்கொள்ள அங்கீகரிகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.101/2019/இ2

தீர்மான எண்.56:-அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

19. இந்நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையங்களான சாரங்கல், ஆணைமடுகு (மாங்காய் தோப்பு) வண்ணாந்துறை, நதிசீலாபுரம், சாணிக்கணவாய் மேடு ஆகிய நிலையங்களில் உள்ள நீர் உறிஞ்சி கிணறு திறந்த வெளி கிணறு மற்றும் ஆழ்துளை கிணறு, மற்றும் நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி கிணறுகளில் உள்ள மின்மோட்டார் மற்றும் குழாய் வால்வுகளை இயக்குதல் பணியினை மேற்கொள்ள ரூ 9.00 இலட்சத்திற்க்கு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு தீர்மான எண் 212 நாள்: 03.03.2019-ல் அங்கீகாரம் பெற்று 31.08.2019-ம் தேதி வரை பணிகள் மேற்கெள்ளப்பட்டதில் ரூ 163440.00 மட்டுமே மீதம் உள்ளது. எனவே, மேற்படி பணியினை மேலும், 6 மாத காலத்திற்க்கு 16 எண்ணிக்கை பணியாளர்களை கொண்டு தொடர்ந்து பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினத் தொகை ரூ9.00 லட்சத்திற்க்கு அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. அங்கீகாரம் வழங்கலாம். மேற்கண்ட பணிக்காகும் செலவினத்தை குடிநீர் நிதியின் கீழ் மேற்க்கொள்ளவும் அங்கீகரிக்கலாம்.
2. குடிநீர் வினியோக பணியின் அவசியம் கருதி மேற்படி பணியினை எற்க்கனவே செய்து வரும் ஒப்பந்ததாரரை கொண்டு பணியினை மேற்க்கொள்ள அங்கீகிகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.102/2019/இ2
தீர்மான எண்.57:-அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

20. இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான கணினி, பிரின்டர்கள் மற்றும் இதர கணினி மற்றும் கணினி பயன்பாடு பொருட்கள் தேவைபடுவதால், மேற்படி பொருட்களை Electronics Corporation of Tamil Nadu (ELCOT) தமிழ்நாடு அரசு நிறுவனத்திலிருந்து கொள்முதல் செய்ய விலைப்பட்டியல் கோரப்பட்டதில் ELCOT நிறுவன விலைப்பட்டியல் ELCOT/Proc/C020/009/003/054/19-20 dt.13.09.2019 கீழ்க்கண்டவாறு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன் விவரம் கீழ்வருமாறு

| S. No. | Description | Unit Price | Quantity No. | Total Amount |
|---|---|---|---|---|
| 1 | 33156-OT-33156- Laser Printer A4 - 30 PPM Mono with duplex Unit | 12360.00 | 15 | 185400.00 |
| 2 | 32830-OT-G-32830 SWIT-006-G - 24 Port 10/100/1000 Mbps Unmanaged switch | 4686.72 | 5 | 23433.60 |
| 3 | 32712-OT-G-DMP009A-G - Dot Matrix Printer | 9299.00 | 3 | 27897.00 |
| 4 | 33001-OT33001-ACC004-8GB DDR 4 MEMORY IN LIEU OF 4GB | 4000.00 | 1 | 4000.00 |
| 5 | 33040-ot-g-33040 DT 205A 3W Desktop Computer - Intel i7 | 43400.00 | 15 | 651000.00 |
| 6 | 33240-OT-33240-MFD-009-A4-38PPM-MFD-MONO-COPIER/ PRINER/SCANNER/FAX MAKE HP MFP 427 | 29850.00 | 2 | 59700.00 |
| 7 | WINDOWS OS LATEST VERSION WITH DVD | 9400.00 | 15 | 141000.00 |
| 8 | 1TB HDD IN livu of 500 GB SATA HDD | 1900.00 | 1 | 1900.00 |
| 9 | 33040-OT-33040-013-External HDD 1TB | 3950.00 | 3 | 11850.00 |
| 10 | Laptop (I7, 4GB RAM, 500 GB HARD DISK) | 42600.00 | 1 | 42600.00 |
| 11 | 33040-OT-33040-003 - Antivirus - K7 with 3 years Licence | 1790.00 | 45 | 80550.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 12 | PRE LOADED WINDOWS 10 64 PIT WITH 3 YEARS ANTI VIRUS SOFTWARE | 8350.00 | 1 | 8350.00 |
| 13 | 32947-OT-Misc - 32947- Misc-020 - 16 GB Pen Drive cover type | 470.00 | 20 | 9400.00 |
| 14 | 32947-OT-Misc - 32947- Misc-037 - Mechanical Keyboard | 1761.86 | 15 | 26427.90 |
| 15 | 32947-OT-Misc - 32947- Misc-034 - Optical Mouse with pad | 345.00 | 15 | 5175.00 |
| 16 | 32947-OT-Misc - 32947- Misc-012 - DVD Writer (External) | 1424.00 | 2 | 2848.00 |
| | Total Order Value (Excluding Tax) | | | 1281531.50 |
| | GST 18% | | | 230675.67 |
| | Total Order Value (Including Tax) | | | 1512207.17 |
| | ELCOT Service Charges @ 2.50% of the order value | | | 32038.29 |
| | GST 18% on Service Charges | | | 5766.89 |
| | Advertisement charges on the prorata basis | | | 3203.83 |
| | Total | | | 1553216.18 |

மேற்படி பொருட்களை ELCOT நிறுவனத்திலிருந்து கொள்முதல் செய்யவும், அதற்காகும் செலவினத் தொகை ரூ.15,53,216-இ ELCOT நிறுவனத்திற்கு செலுத்தவும் அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :அ. அங்கீகாரம் வழங்கலாம், மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ள அங்கீகாரம் வழங்கலாம்.

ஆ.மேற்படி பொருட்களை Electronics Corporation of Tamil Nadu (ELCOT) தமிழ்நாடு அரசு நிறுவனத்திலிருந்து கொள்முதல் செய்ய அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.1170/2018/இ2

தீர்மான எண்.58:-அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

ஓம்/-த.சௌந்தரராஜன்
தனி அலுவலர்

/உண்மை நகல்/

ஆணையாளர்
ஆம்பூர் நகராட்சி